ஈழம் :

# பாசிசத் தேர்தல்களும் அமைதிப் படையின் அட்டூழியங்களும்

பாசிஸ்டுகள் வாயைத் திறந்தால் கொஞ்சமும் கலப்படமில்லாத பொய்யே புளுகுகின்றனர். கையை அசைத்தால் பரந்துபட்ட மக்களின் படுகொலைகளுக்கு உத்திரவு போடுகிறார்கள். இது பொதுவான நியதி. இதையே இப்போது இலங்கையிலும், இந்தியாவிலும் நம் கண் முன்னே காண்கிறோம்.

இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிட்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு அந் நாட்டின் பிரச்சினைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக வெற்றிகரமாகத் தீர்த்து வருவதாக இந்திய - இலங்கை பாசிஸ்டுகள் புளுகுகிறார்கள்.

ஈழத்தின் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, இலங்கை வாழ் இந்தியத் தமிழருக்குக் குடியுரிமை, தமிழ் ஆட்சி மொழி, அதிகாரப் பகிர்வு போன்ற தமிழர் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப் பட்டாகி விட்டது. விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டு, வடக்கு - கிழக்கு மாகாணத் தேர்தல் ஜனநாயக முறையில் நடந்து, மாகாண கவுன்சிலும், தமிழர் ஆட்சியும் நிலைநாட்டப் பட்டாகி விட்டது.

மக்கள் விடுதலை முன்னணி. (ஜே.வி.பி) மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய தீவிரவாத இயக்கங்களின் பலாத்காரம் - புறக்கணிப்பு மீறி எல்லா மாகாணத் தேர்தல்களும், இலங்கை அதிபர் தேர்தல்களும் வெற்றிகரமாக நடந்து முடிந்து விட்டன. தீவிரவாதிகளின் வன்முறைப் பாதையை நிராகரித்து விட்டு ஜனநாயகத்தை வெற்றிபெறச் செய்து விட்டார்கள், இலங்கை மக்கள். நாடாளுமன்றமும் கலைக்கப் பட்டு பிப்ரவரி மாதம் தேர்தல்கள் நடக்க உள்ளன. ஜே.வி.பி மற்றும் புலிகள் தவிர எல்லாக் கட்சிகளும் அதிலே பங்கேற்கப் போகின்றன.

திட்டமிட்டபடி அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறி வருவதால் ''இந்திய அமைதிப் படை'' பகுதி பகுதியாக விலக்கிக் கொள்ளப் படுகிறது. ஜெயவர்த்தனே - பிரேமதாசா - ராஜீவ் ஆகியோரின் அரசியல் தீர்க்க தரிசனம் வென்று விட்டது.

இவை இலங்கை - இந்திய பாசிஸ்டுகள் தொடர்ந்து செய்துவரும் பொய் பிரச்சாரங்கள். ரேடியோ, டி.வி முதலிய அரசுப் பிரச்சாரச் சாதனங்களும், அதன் கூலிப் பிரச்சாரகர்களான சோ, ஜெயக்காந்தன், த.பாண்டியன் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளும் இதற்காக முழு வீச்சில் இறக்கி விடப் பட்டுள்ளனர்.

ஆனால் உண்மை வலுவானது. பாசிஸ்டுகள் எவ்வளவு தூரம் முயன்றாலும் அதை மறைத்து விட முடியாது.

## இந்திய இராணுவத்தின் கிரிமினல் குற்றங்கள்

ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்திய இராணுவம் பல கிரிமினல் குற்றங்கள் செய்து வருகின்றன. எவ்வளவோ ஆதாரங்களுடன் ஈழ மக்கள் அவற்றை நிரூபித்த போதும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளே அம்பலப் படுத்திக் கண்டித்த போதும் இலங்கை -இந்திய பாசிஸ்டுகள் மறுத்து வந்தார்கள். இந்திய இராணுவத்தின் கிரிமினல் குற்றங்கள் எல்லை மீறி போய் விட்டன; தலைமையின் கட்டுப்பாட்டையும் மீறி விட்டனர். எனவே குற்றவாளிகளைத் தண்டிப்பதாக சில கண் துடைப்பு நடவடிக்கைகளை இராணுவத் தலைமையே மேற்கொள்ளுவதாக இப்போது செய்திகள் வருகின்றன.

1987 , நவ.21 அன்று 270வது என்ஜிவீரிங் ரெஜிமெண்டைச் சேர்ந்த நாயக் பல்தேவ் சிங் என்பவன் திரிகோணமலை கடைவீதியில் கண்மண் தெரியாமல் சுட்டு ஏழு சிவிலியன்களைக் கொன்று நான்கு பேரைப் படுகாயப் படுத்தினான். அவனுடைய மருமகன் முதல் நாளன்று நடந்த சண்டையில் மாண்டதால் ஆத்திரமடைந்து இப்படிச் செய்தானாம்.

மக்கள் திரள் படுகொலை செய்திருப்பதாக இந்திய இராணுவம் ஏற்றுக் கொள்ளும் ஒரு விவகாரம் தான் இது. யாழ் போரின் போது ஏராளமான சிவிலியன்கள் மீது இராணுவ டாங்கிகளை மிதித்துப் படுகொலை செய்ததில் இ... ஒவ்வொரு கண்ணி வெடிச் சாவுக... இழப்புகள் நேரும் போதெல்லாம் ம... திரள் படுகொலைகளில் இந்திய இ...வம் ஈடுபட்டுள்ளது. புலிகள் என சந்... துக்குள்ளாகும் இளைஞர்களைச் ...வதை படுகொலை செய்வதற்கென்றே... வொரு முகாம்களிடம் தனிப் பிரி... இடம் ஒதுக்கப் பட்டுள்ளது. இவை... லாம் கிரிமினல் குற்றங்கள் அல்ல; ...ணுவ ரீதியிலான நடவடிக்கைகள் ... திட்டமிட்டு செய்வதற்கு அனுமதிக்க...கின்றன.

ஈழப் பெண்களை கற்பழிப்பது, ... தமிழர் சொத்துக்களைச் சூறையாடு... புலிகள் எனச் சிறுவர்கள் - இளைஞர்... முகாம்களுக்கு கடத்திப் போய் ஓ... பாலுறவு கொள்ளுவது, மின்... கருவிகளைக் கடத்துவது ஆகிய பல்... குற்றங்களுக்காக பல சிப்பாய்கள் ... விசாரனை நடக்கின்றன. 1987 டிச... தேதி மணி என்கிற சிப்பாய் கொடி... கிராமத்திலே ஒரு திருமண... பெண்ணைக் கற்பழித்தான், இரண்டு ... கடிகாரங்களைத் திருடினான். 1987 ... 17ந்தேதி கர்னையில் சிங் என்கிற சிப்...



ஈழ துரோகக் கும்பல் ஈ.பி.ஆர்.எல்.எஃப்க்கு ஆதரவு பெருகி தேர்தலுக்குப் ... யாழ் நகரில் நடந்த பொதுக் கூட்டத்தில் 5000 பேர் கலந்து கொண்டதாக எடுபிடி... புளுகுகின்றனர். அவர்கள் பிரசுரித்த படத்திலே கூட 200, 300 பேருக்கு மேல் இல்... அவர்கள் கூட நிர்பந்தமாக இழுத்து வரப் பட்டவர்கள்; சாதாரண உடையணி... அமைதிப் படையினர் தான்.

...ன்னொரு பெண்ணைக் கற்பழித்தான். 1988 ஜனவரி 13ந்தேதி குல்வந்த் சிங் என்ற சிப்பாய் யாழ் அருகே மண்டைத்தீவில் தங்க நகைகளைக் கொள்ளையிட்டான். 1988 பிப்ரவரி 1ந்தேதி யாழ். பருத்தித்துறை அருகே தெற்கு துன்னாமலையில் ...ராஜ் மீனா என்கிற சிப்பாய் ஒரு சிறுமியைக் கற்பழித்தான். 1988 மே 27ந்தேதி ...வெடி கிராமத்திலே புகுந்து லாதூர்லால் மற்றும் பாபுலால் ஆகிய இரு சிப்பாய்கள் ஒரு திருமணமான பெண்ணைக் கற்பழித்தார்கள்.

1988 ஜனவரி - பிப்ரவரியில் யாழ் ...கோட்டையில் பதான் சிங் என்பவன் 4 ...ப்படை இளைஞர்களிடம் தகாத உடலுறவு கொண்டான். 1988 ஏப்ரல் 11ந்தேதி ...வாசிங், சுபாஷ்சிங், சுரேஷ்குமார், ஹர்...சிங், ராம்பூல் சிங், பாகிராத் ராம் ஆகிய ஆறு பேரும் சேர்ந்து விசுமாடு கிராமத்துக்குள் புகுந்து பல பெண்களைக் ...த்திக் கற்பழித்தனர். 1987 டிசம்பர் ...ந்தேதி பன்வாரிலால் என்பவன் காதாடி கிராமத்தில் ஒரு பெண்ணைக் கற்பழித்தான்.

இந்தக் குற்றங்களுக்காக இந்திய கிரிமினல் குற்றச் சட்டத்தின் 375, 376 ஆகிய பிரிவுகளின் கீழ் விசாரித்துத் தண்டிப்பதானால் 10 ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை கொடுக்க வேண்டும். எனவே இராணுவச் சட்டப் பிரிவு 69ன் படி, உடனடி மேலதிகாரி விசாரித்து நான்கு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை மட்டுமே தண்டிக்குமாறு செய்து விட முயலுகிறார்கள். இவையும் கூட உள்ளூர் மக்கள் துணிந்து போராடியதால், விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வழக்குகள்தான். இன்னும் இந்திய உளவுப்படை 'ரா' உட்பட பல அமைப்புகள் கொடுத்த ஏராளமான புகார்களுக்கு ஆதாரங்கள் இல்லை என்று கூறி இராணுவத் தலைமை நிராகரித்து விட்டது (இந்தச் செய்திகளுக்கு ஆதாரம்: இந்தியப் பத்திரிகை சண்டே அப்சர்வர், புது டில்லி 18-24, '88). இன்னும் ஏராளமான படுகொலைகள், கற்பழிப்பு, கொள்ளை, கடத்தல் குற்றங்கள் பற்றி செய்திகள் நமக்கு நேரடியாகவே கிடைக்கின்றன.

உலகிலேயே கேடு கெட்ட எல்லா ஆக்கிரமிப்பு இராணுவங்களையும் மிஞ்சிவிடும் அட்டூழியங்கள் அக்கிரமங்களில் ஈடுபட்டுள்ள இந்திய இராணுவம் தனது அமைதிப்பணியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்புவதாக புளுகுகிறார்கள். இது, எதிர்வரும் தமிழகச் சட்டமன்ற மற்றும் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலுக்காகச் செய்யும் பித்தலாட்டமே தவிரவேறு ஒன்றுமில்லை. இந்திய இராணுவம் இலங்கையிலே நிரந்தரமாகத் தங்கிவிடுவதற்கான உரிமையை -ஏற்பாட்டை இந்திய-இலங்கை ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளது. 1000 கோடி ரூபாய்க்கு மேலே செலவழித்து, 1500 பேருக்கு மேலே பலிகொடுத்து ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்திய இராணுவம் தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கத்தை விட்டுக் கொடுத்து விலகி விடும் என்பது பச்சைப் பொய்தான்!

## ஈழத்தமிழன் ரத்தத்திலே நஞ்சு கலக்கும் பாசிஸ்டுகள்

இந்தியப் பிரதமர் ராஜீவின் தயவினால் ஈழத்தமிழர் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேறி நல்வாழ்வுக்குத் திரும்புவதாகக் கூலிப் பிரசாரகர்கள் புளுகுகிறார்கள். தமிழனுக்கு ஒரு மாநிலம், தமிழனுக்கு ஒரு ஆட்சி -மந்திரி சபை - முதல்வர் .தமிழ்க்கு ஆட்சிமொழித் தகுதி. தமிழனுக்கு அதிகாரப்பகிர்வு. இலங்கைத் தமிழனுக்குக் குடியுரிமை. இவை எல்லாம் ராஜீவின் கருணையினால் கிட்டிய சலுகைகள். சாதனைகள் என்று புளுகுகிறார்கள். புலிகளின் வன்முறைக்கு எதிராக ஜனநாயக முறையில் தேர்தல் நடத்திவிட்டதாக ஈழத்தமிழர் பெரும்பான்மையினர் வாக்களித்ததாக பெருமை அடித்துக் கொள்ளுகிறார்கள். அத்தனையும் பித்தலாட்டம்!

ஈழத்திலே தேர்தல் நடத்துவதற்கான அமைதியான, சாதகமான சூழ்நிலை இல்லை என இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள பல அரசியல் கட்சிகளும், சேவை இயக்கங்களும், பத்திரிகைகளும் எச்சரித்தன. அத்தனையையும் நிராகரித்து விட்டு எப்படியாவது ஈழத்திலே ஒரு கைக்கூலி -பொம்மை அரசை நிறுவுவது என்று திட்டமிட்டு இந்திய-இலங்கை பாசிச ஆளும் கும்பல்கள் செயல்பட்டன. ஈழத்தில் ஜனநாயகத் தேர்தல் நடந்ததாகக் கூறும் மோசடிகளும் இப்போது அம்பலமாகி விட்டன.

ஈழத்தின் வடபகுதியிலே தேர்தல் நடத்தவே முடியாது என்பதால் போட்டியின்றி வெற்றி என்கிற நாடகமாடியது இந்திய இராணுவமும் அரசும். ஏற்கனவே தனது கைக்கூலிகளான ஈ.பி.ஆர்.எல். எஃப் ஈ.என்.டி.எல்.எஃப், ஆகியோரிடையே தொகுதிகளை பதவிகளைப் பகிர்ந்தளித்து, இராணுவத்தை வைத்து வேட்பு மனுக்களை தாக்கல் செய்தது. போட்டியிட விரும்பிய முஸ்லிம் காங்கிரசாரை விரட்டியடித்தது. வேட்பு மனுக்களைப் பெறவும், தேர்தலை நடத்தவும் ஈழப் பகுதி அதிகாரிகள் மறுத்துவிடவே, கொழும்பிலிருந்து இந்திய இராணுவ விமானங்கள் மூலம் சிங்கள அதிகாரிகளைக் கொண்டு வந்து குவித்தது.

வேட்பு மனுத்தாக்கல்களின் போதும், கிழக்கில் வாக்குப்பதிவின் போதும் இராணுவத்தைக் குவித்து ஊரடங்கு விதித்தது. வாகனங்கள் போக்குவரத்துக்கள் எல்லாம் தடுக்கப்பட்டது. வாக்காளர் அடையாள அட்டைகள் மக்களிடம் விநியோகிக்கப்படவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூலிப்படையினரிடம் மொத்தமாக் கொடுக்கப்பட்டது. 5000 அதிகாரிகளை வைத்து, 576 வாக்குச் சாவடிகள் மூலம் வாக்குப் பதிவு நடப்பதாகக் கூறியது. ஆனால் தேர்தலன்று 252 சாவடிகளை ரத்து செய்துவிட்டு 600 சிங்கள அதிகாரிகளை வைத்து 324 சாவடிகளில் மட்டும் வாக்குப்பதிவு நடந்ததாக் கூறியது. ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூலிப்படையினர் ஓரிரு சாவடிகளில் நிர்பந்தமாகத் திரட்டப்பட்ட மக்களைப் பத்திரிக்கையாளர்களிடம் காட்டி பெரு திரளான மக்கள் வாக்களித்ததாகப் புளுகினர்.

இனக்கலவரங்களால் குடிபெயர்ந்த தமிழர்கள் மீண்டும் குடியமர்த்தப்படாத நிலை உள்ள வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை தரப்படவில்லை; தேர்தலன்று பல வாக்குச் சாவடிகள் ரத்து செய்யப்பட்டன; வேறு சாவடிகள் குறிப்பிடவோ, அங்கு போகவாகனமோ இல்லை. இந்நிலையில் 60 சதவிகித மக்கள் வாக்களித்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அங்கீகரித்துவிட்டதாக புளுகுகிறது இந்திய-இலங்கை பாசிச கும்பல். தேர்தல் பணிகள் அனைத்துக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப் மற்றும் ஈ.என்.டி.எல்.எஃப் பிரச்சாரங்களுக்கும் இந்திய இராணுவ வாகனங்களுமே பயன்படுத்தப்பட்டன. இந்திய இராணுவ மேற்பார்வையிலேயே, நேரடித் தலையீட்டிலேயே தேர்தல்கள் நடத்தப்பட்டன. உண்மையில் பெரும்பான்மையான மக்கள் தேர்தலைப் புறக்கணித்து விட்ட நிலையில் இந்திய இராணுவத்தினர் முன்னிலையில் அவர்களின் கைக்கூலிகளே வாக்குச் சீட்டுகளில் முத்திரை குத்திக் கொண்டனர்.

கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூட்டணியைப் பெரும்பான்மையான ஈழத்தமிழர்கள் ஆதரிப்பதாக வேறு புளுகுகின்றனர். ஆனால் பிறகு நடந்த இலங்கை அதிபர் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் பகிரங்கமாக ஆதரித்துப் பிரச்சாரம் செய்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அப்படியே ஆதரிக்கும் போலி கம்யூனிஸ்டு - போலி சோசலிஸ்டு அணி வேட்பாளர் ஓசி அபய குணசேகரா மிகக் குறைவான வாக்குகளே பெற்றார். சிங்கள வெறியர் இந்திய-இலங்கைஒப்பந்தத்தைஏற்காதவர்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிரசாரம் செய்த ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேமதேசா பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றார். அப்படியானால் கிழக்கு மாகாண மக்களின் விருப்பம் என்ன? வாய் பொத்திக் கொண்டன பாசிச கும்பல்களும் கைக்கூலிகளும்.

அதேபோல வட ஈழத்தில் போட்டியின்றி வெற்றி பெற்றதாகக் கூறிக் கொள்ளும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்க்கு ஆதரவு பெருகுவதாக வேறு புளுகுகின்றனர். தேர்தலுக்குப் பிறகு யாழ் நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் 5000 பேர் வந்ததாகக் கூறிக் கொள்கின்றனர். இதை நிரூபிக்க அவர்கள் பிரசுரித்துள்ளனர்: அதுவே அவர்களைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. இங்கே ராஜீவ் காந்தி உயிருக்குப் பயந்து கொண்டு நடத்தும் பொதுக்கூட்டங்களைப் போல மேடையிலிருந்து பல அடி தூரம் தள்ளி பார்வையாளர்கள். அதுவும் 200, 300 பேருக்கு மேலே கிடையாது. அவர்க

ளும் நிர்பந்தமாக இழுத்து வரப்பட்ட சிறுவர்கள், முதியவர்கள், சாதாரண உடையில் உள்ள இந்திய இராணுவத்தினர், மற்படி அவர்களின் கைக்கூலி அமைப்பினர்.

வட ஈழத்திலும் இந்திய-இலங்கை ஒப்பந்த ஆதரவு பெருகுவதாக கூறுவது பொய்யென நிரூபிக்கும் மற்றொரு ஆதாரம் அதிபர் தேர்தலிலே 20 சதவிகிதத்துக்கும் குறைவானவர்கள் வாக்களித்ததாகவும், அதிலும் பெரும்பான்மையினர் ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்ப்பதாகக் கூறும் பண்டாரநாயகாவுக்கே வாக்களித்ததாகவும் இந்திய-இலங்கை ஆளும் கும்பல்களே ஒப்புக் கொள்ளுகின்றன.

மேற்கண்ட பொய்யான காரணங்களைக் கூறி விடுதலைப் புலிகள் மக்களிடையே செல்வாக்கு இழந்து விட்டனர். இராணுவ ரீதியிலும் ஒடுக்கப்பட்டு விட்டனர் என்கிறது ஜெயவர்த்தனே - பிரேமதாசா - ராஜீவ் கும்பல். இந்திய இராணுவத்தின் மிருகபலம் - படுகொலைகளால் புலிகள் பலவீனமடைந்து பின்வாங்கி இருந்தாலும் அழிந்து விடவோ, போரிடும் சக்தியை இழந்து விடவோ இல்லை என்று இந்திய -இலங்கை மற்றும் பிற வெளிநாட்டு ஏடுகள் கணிக்கின்றன. ஈழக் கிராமப் புறங்களில் காடுகளில் புலிகளுடன் பேட்டி கண்டு புகைப்படங்களுடன் நேரடிச் செய்திகள் தருகின்றன. மற்ற பிற புரட்சிகர, ஜனநாயக சக்திகளுடன் இணைந்து, பரந்து பட்ட மக்களைச் சார்ந்து விடுதலைப் போரை நடத்தத் தவறியபோதும், சிங்கள இன வெறிக்கும் இந்திய ஆக்கிரமிப்புக்கும் எதிராக இன்னமும் போரிடும் சக்தியாக இருப்பதால் ஈழ மக்களின் ஆதரவை விடுதலைப் புலிகள் பெறுகிறார்கள் என்பதே உண்மை.

எனவேதான் புலிகளை எதிர்கொள்வதற்கு ஏற்கனவே திட்டமிட்டபடி ஈழத்தில் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவியவுடன் அடுத்த கட்டமாக தமிழனைக் கொண்டே தமிழனைக் கொல்லும் சதியை நிறைவேற்றுவதற்கான வேலைகளில் ஆளும் பாசிச கும்பல்கள் இறங்கி விட்டன. தனது கைக்கூலிகளுக்கு ஏராளமான ஆயுதங்களும், பயிற்சியிடம் கொடுத்து ஈழ இளைஞர்களை வேட்டையாடுவதில் இறக்கிவிட்டிருக்கிறது இந்திய இராணுவம்.

''ஒவ்வொரு நாளும் சாலை ஓரங்களிலே சில இளைஞர் பிணங்களைப் பார்க்கிறோம். ஆனால் யார் அவர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்று தெரியவில்லை'', என்கிறார் 70 வயதான ஒரு பெரியவர். ''ஒவ்வொரு நாளும் 2, 3 பிணங்களை நாங்கள் எடுக்கிறோம் அவை புலிகளின் ஆதரவாளர்களுடையன என்று சொல்கிறார்கள்'' என்கிறார் யாழ் கோட்டையில் உள்ள ஒரு சிங்களப் போலீசுக்காரர். இவையெல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூலிப்படையினர் நடத்தும் படுகொலைகள் என்று இந்தியப் பத்திரிகையான ''தீவீக்'' எழுதுகிறது.

இந்த நரவேட்டையை அமைப்பு ரீதியாக, சட்டபூர்வமாகச் செய்வதற்கென்றே ''குடிமக்கள் சேவைப்படை'' ஒன்றைக் கட்டி ஆயுதப் பயிற்சியளித்து வருகிறது இந்திய இராணுவம். ஏற்கனவே உள்ள கூலிப்படையினரோடு 16 லிருந்து 22 வயதான எல்லா ஈழ இளைஞர்கள் கட்டாயமாக இந்தப் படையிலே சேர்க்கப்படுகி றார்கள். வியத்நாமை ஆக்கிரத்துக் கொண்டு அமெரிக்க இராணும் பின்பற்றிய வியத்நாமிய மயமாக்கும் முறை; வாட்டர்கேட் ஊழல் பேர்வழி நிக்சன் வகுத்துக் கடைப்பிடித்த அதே உத்தியை போஃபார்ஸ் ஊழல் பேர்வழி ராஜீவ் காப்பியடிக்கிறார். ஈழத்தமிழனை வைத்து ஈழத்தமிழனைப் படுகொலை செய்வதற்கு ஏவி விடுகிறார். அமெரிக்க ஆக்கிரமிப்புப் [...] நேர்ந்த அதே கதிதான் இந்தியக் [...] வெறி இராணுவத்துக்கும் ஏற்படும் [...] நிச்சயம்!



ஈழத் தமிழனை வைத்து ஈழத் தமிழனைக் கொல்ல குடிமக்கள் சேவைப் படையைக் கட்டி ஆயுதப் பயிற்சியளித்து வருகிறது இந்திய ராணுவம். மட்டக் கிளப்பு பயிற்சி முகாமில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இளைஞர்கள்.

### ''பாசிச தேர்தல்க[...]
### பாசிச ஜனநாயகம்[...]

அரசு பயங்கரவாதத்தைக் [...] விழ்த்து விட்டு பாசிச முறையி[...] தல்கள் நடத்துவதும் துப்பாக்கி[...] யிலே ஜனநாயகத்தை தூக்கி நிறு[...] இப்போது பாசிஸ்டுகளின் வ[...] விட்டது. இலங்கை அதிபர் தேர்த[...] அறிவிக்கப்பட்டதும், ''துப்பாக்கி[...] டாக்களை ஓட்டுச் சீட்டுகள் வென்[...] ன'' என்று மிதப்போடு அறிவித்தா[...] பிரேமதாசா. ஜனநாயகத்தின் [...] என்று பீற்றிக் கொள்ளும் இலங்கை[...] தேர்தல்கள் எந்தச் சூழ்நிலையில் [...] நடத்தப்பட்டன என்பதைக் கவ[...] தெரியும் இது ''பாசிச தேர்தல்க[...] ஜனநாயகம்'' என்பது.

இந்திய- இலங்கை [...] கையெழுத்தான பிறகு இதுவ[...] பேரை ஜே.வி.பி.யினர் அழித்தொ[...] ளனர். அவர்கள் பாசிச ஜெய[...] கட்சி தலைவர்கள், அரசு அ[...] -இராணுவத்தினர், போலீசுக்[...] அவர்களின் கைக்கூலிகள் [...] இலங்கை அதிபர் தேர்தல் அ[...] பட்ட பிறகு அழித்தொழிப்பு[...] தொடர்ந்து பல நாட்கள் பொது[...] நிறுத்தங்கள் -ஆர்ப்பாட்டங்கள் [...] னர். பள்ளி -கல்லூரிகள் மூட[...] அரசு அலுவலகங்கள், தனியார் [...] சந்தைகள், ஆலைகள், வங்கிகள் [...] ரயில்போக்குவரத்துகள் அனைத்து[...] போயின. வேலை நிறுத்தங்களை [...] திக்கும் கடைகள் -ஆலைகள் [...] னங்களை அரசுடைமையாக்குவத[...] ரவு போட்டும் அரசு ஊழியர்கள் [...] ளர்களை வேலை நீக்கம் செய்வ[...] ரித்தும், பல நாள் ஊரடங்கு [...] போட்டும் போராட்டங்கள் நீடித்த[...] பாட்டம் செய்பவர்களைக் கண்ட[...] வும், தெருக்களிலேயே பி[...] எரிக்கவும் உத்திரவு போட்டது [...] ஜெயவர்த்தனே அரசு.

40,000 இராணுவப் படையின[...] கூடவே 'பச்சைப் புலிப்படை' [...] ஆளும் கட்சி கொலைகாரர்களை [...] யது. ''பலபத்து ஜே.வி.பி.யினரை [...] றுக்கணக்கான அதன் ஆதரவாளர்[...] பிடித்துக் கொன்று தெருக்களிலே[...] து''. ''இராணுவமும் அதன் [...] படைக் குழுக்களும் அதன் பா[...] பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து [...] அம்பிதியே கிராமத்தில் அவர்க[...] வீடுகளில் இருந்து இழுத்துப் போ[...] பையன்களின் பிணங்கள் தெரு[...] இறைந்து கிடந்ததை பத்திரிகை[...] பார்த்தார்கள். அவர்கள் ஒவ்வொ[...] தலையிலே சுடப்பட்டுக் கி[...]

ஜே.வி.பி.யினர் என்று சந்தேகப்படும் பல ரும் காணவில்லை என்று பல்வேறு மனித உரிமை அமைப்புகள் புகார் கூறுகின் றன. அவர்கள் சிறைப்பட்டிருக்கலாம் அல் லது "கடுவேலா" அருகே நடந்ததைப் போல கொன்று உடனடியாக எரிக்கப்பட்டி ருக்கலாம்" (அமெரிக்க நியூஸ் வீக் '88 டிசம்பர் 19)

இவ்வளவு பயங்கரத்துக்கிடையேயும் தேர்தல் அன்று 40 பேர் கொல்லப்பட்டனர். மொத்தம் 55 சதவிகித்தினர் ஓட்டளித் ததாக அரசு கூறுகிறது. "தேர்தலே மோசடி. மோனாராகலா பகுதியில் 49 சாவ டிகளில் தேர்தல் அதிகாரிகளே இல்லை. ஆளும் கட்சி குண்டர் படையினரால் மற்ற கட்சியினர் விரட்டப்பட்டனர். வோட்டுப் பெட்டிகளை போலீசு நிலையத்துக்குக் கொண்டு சென்று ஆளும் கட்சி முத்திரை குத்திக் கொண்டனர்" என்று பண்டார நாயகா புலம்புகிறார். வழக்கமாக 80% சதவிகிதம் ஓட்டளிப்பார கள். இப்போது அரசு கணக்குப்படியே மொத்தம் 55% சத விகிதத்தினரே வாக்களித்தனர். தேர்தல் நடந்போதும் பிறகும் ஊரடங்கு உத்திரவு இருந்தது. கொழும்பு உட்பட நகரங்கள் வெறிச்சோடிக்கிடந்தன என்று ராஜீவ் ஆத ரவு சண்டே ஏடு எழுதுகிறது. ஆக, அரசு பயங்கரவாதத்தின் கீழே நடந்த இதை பாசிச தேர்தல் என்றுதான் சொல்ல வேண் டும்.

இந்தியத் தமிழர் காங்கிரஸ் கட்சியின் தலைவர்,பதவிக்காக நடத்திய பேரத்தில் பிரேமதாசாவை ஆதரித்ததால் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற் றார். உடனேயே ஓட்டுப் பொறுக்குவ தற்காக அடித்த இந்திய எதிர்ப்பு கோஷம் காற்றில் பறக்கவிட்டு விட்டு பாசிச ராஜீவுடன் கை கோர்த்துக் கொண்டார்.அடுத்து வரும் தமிழக சட்ட மன்ற மற்றும் இலங்கை நாடாளுமன்ற தேர் தலைக் குறி வைத்து படை விலக்கல் நாடக மாடுகிறார்கள் இரண்டு பாசிஸ்டுகளும்.

துப்பாக்கி முனையிலே தேர்தல்களை நடத்தி விடுவதால் "அமைதி-ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதாக அவர்கள் நம்பி னால் வரலாற்றில் இருந்து பாடங்களை கற்பதற்கு வலுக்கட்டாயமாக மறுக்கி றார்கள் என்றே பொருளாகும். அசாமி லும் பஞ்சாபிலும் இப்படித்தான் தேர் தல்களை நடத்தினார்கள். ஆனால் பிரச்சி னைகள் ஏதுவும் தீரவில்லை; மாறாக மேலும் உக்கிரமாகின. அதேபோல இலங்கை-இந்திய மக்களுக்கு எதிராக இரு நாடுகளின் பாசிஸ்டுகள் நடத்தும் மோசடித் தேர்தல்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வில்லை. இந்திய ஆக்கிரமிப்பு -பிராந்திய மேலாதிக்க வெறியும், கொள்கையும், நடைமு றையும் நீடிக்கும்வரை, சிங்கள பேரினவாத ஒடுக்கு முறையும், பாசிச ஆட்சியும் நீடிக் கும் வரை அவற்றுக் கெதிரான போராட் டங்கள் நீடிக்கவே செய்யும்; வளரும்; வெற்றி பெறும்!

— மாணிக்கவாசகம்

# புரட்சிக்கு அறைகூவல் விடுத்த தேர்தல் புறக்கணிப்பு மாநாடு



அவதூறு, அடக்கு முறைக ளால் நக்சல்பாரி அரசியலை இனி மேலும் மக்களிடமிருந்து தனிமைப்ப டுத்த முடியாது! நக்சல்பாரி அரசியலை உயர்த்தி பிடிக்கும் புரட்சிகர அமைப்புக ளுக்கு மக்கள் காட்டும் ஆதரவும் அரவ ணைப்பும், அதன் லட்சியப் பாதையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் செயல் வீரர்களின் எள்ளளவும் சுயநலமற்ற உழைப்பும் தியாகமும் அதன் அளவிலும் தரத்திலும் நாளும் உயர்ந்து வருவது இதைத் தான் நிரூபிக்கிறது.

போலி ஜனநாயகத் தேர்தல் பாதையை புறக்கணித்து புதிய ஜனநாயகப் புரட்சிக்கு மக்களை அறைகூவி அழைக் கும் நக்சல்பாரி அரசியலின் புரட்சிப் பாதையில் சிறிதும் பிறழாமல் தொடர்ந்து பயணம் செய்யும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி இணைந்து 9.1.89 அன்று திருச்சியில் நடத் திய போலி ஜனநாயகத் தேர்தல் புறக்க ணிப்பு மாநாடு மலரப் போகும் புதிய ஜன நாயகப் புரட்சிக்கு கட்டியங்கூறும் வசந்தத் தின் இடி முழுக்கமாக அமைந்தது. ஆளும் வர்க்கங்களையும் அதன் அடிவருடிக் கூட் டத்தையும் அஞ்சி நடுநடுங்க வைத்தது.

திருச்சி - ருக்மணி திரையரங்கு அரு கில் அமைக்கப் பட்டிருந்த நக்சல்பாரி தியா கிகள் நினைவரங்கத் திடலில் போலி ஜன நாயகத் தேர்தல் புறக்கணிப்பு மாநாடு தனக்கே உரிய பாட்டாளி வர்க்க போர் குணத்தோடு ஆரம்பமானது. உலகம் முழு வதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் விடு தலைக்காகப் போராடி உயிர் நீத்த புரட்சிகர தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தி ம.க.இ..க., வி.வி.மு. ஆகிய இரு அமைப் புகளின் கொடிகளை அவ்வமைப்பின் தோழர்கள் கோவன், நாராயணன் ஆகி யோர் ஏற்றி வைக்க மாநாடு எழுச்சியுடன் துவங்கியது. மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் மோகன் மாநாட்டிற்கு தலைமை தாங்கி கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்.

கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய ம.க.இ.க. பொதுச் செயலர் தோழர் மருதை யன், இணைச் செயலர் தோழர் கதிரவன், அம்மாப் பேட்டை ஒன்றிய வி.வி.மு. தோழர் மாது ஆகியோர், அழுகி நாறும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை, அதை வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கி எறிய வேண்டிய அவசியத்தை -அதற்கு மாற்றாக ஆயுத தாங்கியப் புரட்சியில் மல ரப் போகும் புதிய ஜனநாயக புரட்சி அர சாங்கத்தின் உள்ளடகத்தை மார்க்சிய ஒளி யில் மக்களுக்கு புரியும்படி மிகவும் எளி மையாக விளக்கினார்கள்.

விலை போகும் எம்.எல்.ஏ.க்கள், விலை மாதர்களுடன் சுற்றும் எம்.எல். ஏ.க்கள், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் மந்திரிகள், இவர்களைப் பாதுகாக்கும் இரா ணுவம், போலீசு, நீதிமன்றம், அதிகார வர்க்கம். இவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு உழைக்கும் மக்களின் மீது கட்டவிழ்த்துவி டும் அடக்குமுறைகள் இதை முடிவுக்கு கொண்டு வர முடியாத அதிகாரமற்ற அரட்டை மடம் தான் சட்டமன்றம் பாராளு மன்றம். உண்மையில் மக்களை ஆளுவது மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அதிகார வர்க்க கூட்டம் தான் என்பதை நடைமுறை உதாரணங்களுடன் மக்களின் மனதில் பசு மரத்தாணிப் போல பதிய வைத்தனர்.

கருத்துறைகள் வழங்கிய தோழமை அமைப்புகளான, மக்கள் ஜனநாயக இளை

பொங்கியெழுந்து வீசும் புரட்சிப் பேரலை

